# குருநாகல் இராசதானி கால தலதா மாளிகை - ஓர் வரலாற்றாய்வு

LIBRARY
14 MAY 2025
EASTERN UNIVERSITY, SRI LANKA.

முழுப் பெயர் : முஹம்மது நஸீம் ஹுதா
பதிவிலக்கம் : EU/IS/2018/AC/094
சுட்டிலக்கம் : CS8494

இவ்வாய்வுக் கட்டுரையானது வரலாறு இளங்கலைமாணி சிறப்புக் கற்கைநெறியின் இறுதி வருடப் பரீட்சையின் ஓர் அலகாகக் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

FAC1557
Project Report
Main Library, Eastern University, Sri Lanka

வரலாற்றுத்துறை
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை

2024

## ஆய்வுச் சுருக்கம்

தென்மேற்கு இடம்பெயர்வு இராசதானிகளின் மத்தியில் குருநாகல் இராசதானிக்கு முக்கிய இடமுண்டு. அந்த வகையில், இவ்விராசதானி காலத்தில் நான்காம் பராக்கிரமபாகு மன்னனினால் அமைக்கப்பட்ட மூன்றடுக்கு தலதா மாளிகை முன்னிலைப்படுத்தப்படுகிறது. குருநாகல் இராசதானி காலத்தில் நான்காம் பராக்கிரமபாகு மன்னனால் தலதா மாளிகை கட்டப்பட்டதை இவ்வாய்வின் மூலம் உறுதி செய்வதோடு, குருநாகல் இராசதானி கால தலதா மாளிகையுடன் இணைந்த வரலாற்றை முழுமையாக ஆவணப்படுத்தல் இவ்வாய்வின் நோக்கமாகும் எனலாம். நான்காம் பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் தலதா மாளிகை கட்டப்பட்டதா? குருநாகல் இராசதானி கால தலதா மாளிகையுடன் இணைந்த வரலாற்றின் உண்மை நிலை என்ன? குருநாகல் இராசதானி கால பழைய தலதா மாளிகையின இன்றைய நிலை எவ்வாறு காணப்படுகிறது? போன்ற கடந்தகால நிகழ்வுகளை விரிவாக ஆய்வு செய்வதற்கு உகந்த வரலாற்றியல் ஆய்வு முறை இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. குருநாகல் இராசதானி காலத்தில் தலதா மாளிகை இருந்ததா? என்பது தொடர்பாக, ஆய்வாளர்களிடையே, மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.குருநாகல் இராச்சிய கால பழைய தலதா மாளிகை பற்றி ஆய்வுகள் செய்யப்பட்டாலும் கூட, அந்த ஆய்வுகள் கலவையான முடிவுகளையே காட்டுகின்றன. ஆகவே, இதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வு கள ஆய்வுகள், குருநாகல் இராசதானி கால தலதா மாளிகை பற்றிய தகவலறிந்த நபர்களினுடனான நேர்காணல்கள், குருநாகல் இராசதானி கால தலதா மாளிகையின் தொல்லியற் சான்றுகள், வடமேல் மாகாணத் தொல்லியல் அலுவலகத் தொல்லியல் அறிக்கைகள், குருநாகல் இராச்சிய வரலாற்றை அறிய உதவும் நூல்கள் மற்றும் புகைப்படங்களை முதன்னிலைத் தரவுகளாகக் கொண்டும், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இணையதளக் கட்டுரைகள் மூலம் பெறப்பட்ட தகவல்களை இரண்டாம் நிலைத் தரவுகளாகக் கொண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது, குருநாகல் இராசதானி கால தலதா மாளிகை நிர்மாணம், அதன் அலங்காரங்கள், வழிபாடுகள், தலதா மாளிகை தொடர்பான சட்டங்கள் மற்றும் அதன் இன்றைய நிலை பற்றிய தெளிவான வரலாற்றுத் தகவல்களைத் தொடர்ச்சியாகக் கொண்டமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகவே, குருநாகல் இராசதானி கால தலதா மாளிகை தொடர்பான பிற்கால ஆய்வுகளுக்கு இவ்வாய்வு முன்னோடியாக அமையலாம்.

**திறவுச் சொற்கள்** : இராசதானி, தலதாமாளிகை, தந்ததாது, போதி, பூஜை

# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | I |
| நன்றியுரை | II |
| ஆய்வுச்சுருக்கம் | III |
| 01. ஆய்வு அறிமுகம் | 1 - 7 |
| 02. இலங்கை வரலாற்றில் தலதா மாளிகை | 8 - 58 |
| 03. குருநாகல் இராசதானி கால தலதா மாளிகையின் தோற்றம் | 59 - 77 |
| 04. குருநாகல் இராசதானி கால தலதா மாளிகையின் வளர்ச்சியும், இன்றைய நிலையும் | 78 - 87 |
| 05. முடிவுரை | 88 - 94 |
| உசாத்துணைகள் | 95 - 98 |
| பின்னிணைப்புக்கள் | V - IX |